# “இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள்?”

## (11:25, 26அ)

நாம் ரோமர் 11:25-36ஐ அதன் முழுமைத்துவத்தில் படிப்பதற்கு முன்னர், அது தொடங்குகிற, திகைக்க வைக்கும் மொழிநடைக்குக் கவனத்தைத் தருவது நமக்கு அவசியமாகிறது:

> மேலும், சகோதரரே, நீங்கள் உங்களையே புத்திமான்களென்று எண்ணாதபடிக்கு ஒரு இரகசியத்தை நீங்கள் அறியவேண்டுமென்றிருக் கிறேன்; அதென்னவெனில், புறஜாதியாருடைய நிறைவு உண்டாகும் வரைக்கும் இஸ்ரவேலரில் ஒரு பங்குக்குக் கடினமான மனதுண்டாயிருக்கும். இந்தப்பிரகாரம் இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள் (வசனம் 25, 26அ).

நான் இவ்வசனப்பகுதியைச் சற்றே அச்சத்துடன் அணுகுகிறேன். நான் கல்லூரியில் பட்டம் பெற்றபோது, பெரிய ஆக்லஹாமா நகரத்தின் கிராம சபைக் குழுமத்திற்காகப் பிரசங்கிக்கத் தொடங்கினேன். ஐக்கியம் மற்றும் கலந்துரை யாடல் ஆகியவற்றிற்காக, அந்தப் பகுதியிலிருந்த கிறிஸ்துவின் சபைகளினு டைய பிரசங்கியார்கள் மாதம் ஒருமுறை ஒன்றுகூடுவோம், அந்தக் கூட்டங் களில் நான் வயதில் மிகவும் இளைய பிரசங்கியாராக இருந்தேன். ஒரு மாதக் கூட்டத்தில், ரோமர் 11:25, 26ஐப் பற்றி அடுத்த மாதம் பிரசங்கிக்கும்படி நான் கேட்டுக்கொள்ளப்பட்டேன். அனுபவமிகுந்த சுவிசேஷப் பிரசங்கியார்கள் முன்பாக வேதவசனங்களை எடுத்துரைத்தல் பற்றி நான் பயத்துடன் இருந்தேன். நான் மிகக் கடினமாகப் படித்து நீண்ட நேரம் ஜெபித்தேன். நான் கூறவிருந்த விஷயத்தை அந்தக் குழுவிலிருந்த பலர் ஒப்புக்கொள்ளவில்லை என்பதே அந்த எடுத்துரைப்பைப் பற்றி நான் நினைவில் வைத்துள்ள முக்கியமான விஷய மாக உள்ளது. அதிலிருந்து மீள்வதற்கு எனக்குச் சற்றுக்காலம் ஆனது - மற்றும் இப்போது இங்கு நான், அதே கடினமான மற்றும் நேர்மாறான கருத்துக்களுடைய வசனப்பகுதியைத் திரும்பவும் எதிர்கொள்கிறேன்!

ரோமர் 11:25, 26ன் சந்தர்ப்பப்பொருளில், மத உலகிலுள்ள பலர் “புறஜாதி யாருடைய நிறைவு” என்பதை “புறஜாதியாரின் முழு எண்ணிக்கை” என்பதாக விளக்கப்படுத்துகின்றனர். புறஜாதியிலிருந்து மனமாறுபவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையைத் தேவன் சிந்தையில் கொண்டிருக்கிறார் என்று அவர்கள் நம்புகின்றனர். பின்பு, அந்த எண்ணிக்கை அடையப்படும்போது, யூதர்கள் முழுமையுமாக மனமாறுதலை (“இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்

படுவார்கள்") அவர்கள் முன்னெதிர் நோக்குகின்றனர். இவர்களில் பலர், இந்த நினைவுகூரத்தக்க சம்பவமானது இரண்டாம் வருகையில் அல்லது அதற்கு அண்மையான காலத்திலிருக்கும் என்று நம்புகின்றனர். இந்தப் பாடத்திற்கான தயாரிப்பில் நான் ஈடுபட்டபோது, இந்த விளக்கம் எவ்வளவு பரவலாக உள்ளது என்று கண்டறிந்ததில் நான் திகைப்படைந்தேன். ஆயிரமாண்டு முன்னரசாட்சிக் கொள்கைக்காரர்கள் இந்தக் காட்சியை, "முடிவு காலங்கள்" பற்றிய அவர்களின் போதனையினுடைய பகுதி என்ற வகையில் ஏற்புடையதாக்கியிருந்தனர். கர்த்தருடைய சபையின் உறுப்பினர்களால் எழுதப்பட்ட மிகப்பழைய விளக்கவுரைகள் சிலவற்றிலும்கூட அந்தக் கருத்துக்களில் சில பிரதிபலிக்கப்பட்டதை நான் அறிவேன்.[1] இருப்பினும், 25 மற்றும் 26 ஆகிய வசனங்களில், பவுல் முன்பு ஒருபோதும் வெளிப்படுத்தியிராத ஒரு இரகசியத்தை ("மறைபொருளை") - அதாவது கர்த்தர் மறுபடியும் வருவதற்குச் சற்று முன்னதாக, யூதர்கள் பெருமளவில் மனமாற்றம் அடைவார்கள் என்ற கருத்தை - பகிர்ந்துகொண்டார் என்று சமீபத்திய விளக்கவுரையாளர்களில் பலர் எவ்வாறு நம்புகின்றனர் என்பது பற்றி நான் திகைப்படைகிறேன்.

அபிலைன் கிறிஸ்தவக் கல்லூரியில் எனது ஆசிரியர்களில் ஒருவர், ஒரு கடினமான வசனப்பகுதியை வாசித்து, பின்பு வகுப்பிற்கு, "நான் உங்களுக்கு அடிக்கட்டையைக் காண்பித்திருக்கிறேன். இப்போது அதைச் சுற்றி உழுவதா அல்லது அதைப் பிடுங்கி எடுப்பதா என்பதை நீங்கள் முடிவுசெய்ய வேண்டும்" என்று கூறினார். "பெருமைபாராட்ட முகாந்தரம் இல்லை (11:13-24)" என்ற பாடத்தில், நான் ரோமர் 11:25, 26ல் உள்ள "அடிக்கட்டை" பற்றிய குறிப்பை உங்களுக்குக் கொடுத்தேன். அதைப்பற்றி நாம் என்ன செய்ய முடியும் என்பதைக் காண்பதற்கு, இது வேளையாக உள்ளது.

## மறுப்பதற்கு மூலக்கூற்றுகள்

**மூலக்கூற்று: "பவுல் ஒரு புதிய கருத்தை அறிமுகம் செய்தார்."**

நமது வேதபாட வசனப்பகுதியைப் பற்றிய தவறான புரிந்துகொள்ளுதலின் ஆதாரமூலங்களில் சிலவற்றைச் சுட்டிக்காட்டுவதன்மூலம் தொடங்க என்னை அனுமதியுங்கள். 11ம் அதிகாரத்தின் இறுதிப்பகுதியை - பவுல் ஒரு புதிய கருத்தை அறிமுகப்படுத்துகிறார் என்பது போன்று - அந்த அதிகாரத்தின் எஞ்சிய பகுதியிலிருந்து விளக்கவுரையாளர்கள் தனிமைப்படுத்தும்போது இப்பிரச்சனை தொடங்குகிறது. 25ம் வசனமானது அப்படிப்பட்ட கண்ணோட்டத்தை அகற்றிப்போடுகிறது, ஏனெனில் அவ்வசனம், "மேலும்" (*gar*) என்பதைக் கொண்டு தொடங்குகிறது, தொடர்ந்துவருவதை இது முன்பு வந்ததுடன் பிணைக்கிறது. 25ம் வசனத்தின் "சகோதரரே" என்பவர்கள், பவுல் முன்பு யாருக்குக் கூறிக்கொண்டிருந்தாரோ (வசனம் 13), அதே புறஜாதிக் கிறிஸ்தவர்களாக உள்ளனர். புறஜாதியார் "ஆணவமாகவோ" அல்லது "இறுமாப்பாகவோ" இருக்கக்கூடாது (வசனங்கள் 18, 20), "தங்களையே புத்திமான்களென்று எண்ணி" இருக்கக்கூடாது (வசனம் 25) என்பதை இன்னமும் அப்போஸ்தலர் வேண்டிக் கேட்டுக்கொண்டிருந்தார்.

25 மற்றும் 26ம் வசனங்களைத் தொடர்ந்து வரும் வசனங்களைக் கண்ணோக்குங்கள், மற்றும் அதிகாரத்தின்முதல் பாகத்தில் (காண்க வசனங்கள் 11-14)

அறிமுகப்படுத்தியிருந்த சிந்தனையின் இவ்வரிசையைப் பவுல் தொடர்ந்தார் என்பதை நீங்கள் காண்பீர்கள். (தேவனால்) யூதர்களின் புறக்கணிப்பு, புறஜாதி யார் (தேவனால்) ஏற்றுக்கொள்ளப்படுதலை விளைவித்தது. இது, யூதர்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ளத் தூண்டும்படி நோக்கங்கொண்டிருந்தது, அப்போது (தேவனால்) யூதர்கள் ஏற்றுக்கொள்ளப்படுதலை விளைவிக்கும். சிந்தனையின் இவ்வரிசையானது 11ம் அதிகாரத்தின் நிறைவுப்பகுதியில் திரும்ப உரைக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, 30 மற்றும் 31ம் வசனங்கள் இந்த நிகழ்வுவரிசையை எவ்வாறு வெளிப்படுத்துகின்றன என்பதைக் காண்பதற்கு அவற்றை வாசித்துப் பாருங்கள்:

யூதத்துவக் கீழ்ப்படியாமை
(தேவனால் யூதர்கள் தள்ளிவிடப்பட்டதை விளைவித்தது)

↓

புறஜாதியாருக்கு இரக்கம் காண்பிக்கப்பட்டது
(தேவனால் புறஜாதியார் ஏற்றுக்கொள்ளப்பட்டனர்)

↓

யூதர்களுக்கு இரக்கம் காண்பிக்கப்பட்டது)
(தேவனால் யூதர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டனர்)

**மூலக்கூற்று: " 'இரகசியம்' என்பது முன்பு ஒருக்காலும் வெளிப்படுத்தப்படாத ஒரு இரகசியம் என்று அர்த்தப்படுகிறது."**

"இரகசியம்" என்ற வார்த்தையைக் குறித்ததான குழப்பத்துடன் பிரச்சனை தொடருகிறது. "இரகசியம்" என்பது (*musterion* என்பதிலிருந்து) ஒலிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையாகும். வேதாகமரீதியான பயன் பாட்டில், *musterion* என்பது அறியப்படாததாக உள்ளதைக் குறிப்பிடுவ தில்லை, ஆனால் அதற்கு மாறாக, தேவனால் வெளிப்படுத்தப்பட்டாலன்றி அறியப்படாததாக இருக்கக்கூடியதை குறிக்கிறது (காண்க 1 கொரிந் தியர் 2:7; எபேசியர் 3:11). W. E. வைன் என்பவர், "சாதாரணக் கருத்தில், ஒரு 'இரகசியம்' என்பது மறைத்துவைக்கப்பட்ட அறிவை மறைமுக மாய் உணர்த்துகிறது; வெளிப்படுத்தப்பட்ட சத்தியம் என்பதே அதன் வசன ரீதியான குறிப்புணர்த்துதலாக உள்ளது" என்று எழுதினார்.[2] புதிய ஏற்பாட்டில் "இரகசியம்" என்பது மிகவும் அடிக்கடி, கிறிஸ்துவை இவ்வுலகத்திற்கு அனுப்புவதற்கான தேவனுடைய திட்டத்தையும் இந்தத் திட்டத்தில் அடங்கி யுள்ளவற்றையும் குறிப்பதாயிருந்தது (காண்க கொலோசெயர் 1:27; 2:2; 1 தீமோத் தேயு 3:16). பவுல் ரோமருக்கு எழுதிய நிருபத்தை முடிக்கும் வேளையில் பின்வரு மாறு கூறினார்,

> ஆதிகாலமுதல் *அடக்கமாயிருந்து,* இப்பொழுது தீர்க்கதரிசன ஆகமங்களினாலே அநாதி தேவனுடைய கட்டளையின்படி *வெளியரங்க மாக்கப்பட்டதும்,* சகல ஜாதிகளும் விசுவாசத்திற்குக் கீழ்ப்படியும்படிக்கு

*அவர்களுக்கு அறிவிக்கப்பட்டதுமாயிருக்கிற இரகசியத்தை வெளிப்படுத்து கிறதான, இயேசுகிறிஸ்துவைப் பற்றிய பிரசங்கமாகிய என் சுவிசேஷத்தின் படியே உங்களை ஸ்திரப்படுத்த வல்லவரும் (16:25, 26; என்னால் வலியுறுத்தப் படுகிறது).*

பெரும்பான்மையான எழுத்தாளர்கள், *musterion* என்பதன் அடிப்படை அர்த்தத்தை அறிந்துள்ளனர். இருந்தபோதிலும், அவர்கள் ரோமர் 11:25ல் இன்னமும், பவுல் தமது வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ள இருந்த இரகசியத்தை இவ்வார்த்தை குறிப்பிடுவதாகக் கருத்தை ஏற்படுத்த விரும்புகின்றனர். இந்த இரகசியம் - வேதவசனங்களில் முன் எப்போதும் வெளிப்படுத்தப்பட்டிராததும், வேதவசனங்களில் பின் ஒருபோதும் எவ்விடத்திலும் மீண்டும் குறிப்பிடப் படாததுமான ஒரு விஷயம் - யூதர்கள் மொத்தமாக மனம் மாற்றப்படுதல் என்று கூறப்பட்டுள்ளது.

அதற்குப்பதிலாக நான், *musterion* என்பது நமது வேதபாட வசனப் பகுதியில் அந்த இரகசியமாக இருப்பதில்லை என்று கருத்துத் தெரிவிக்க என்னை அனுமதியுங்கள். ஏற்கனவே குறிப்பிட்டபடி, பவுல் ஒரு புதிய கருத்தை அறிமுகப்படுத்தவில்லை; மாறாக, அவர் தமது சிந்தனையின் பிரதான வரிசையைத் தொடர்ந்தார். *Musterion* என்பது சந்தர்ப்பப் பொருளில், புறஜாதியாரை ஏற்றுக்கொள்வதின்மூலம் யூதர்களிடத்தில் வைராக்கி யத்தை (ஊக்கமான விருப்பத்தை) தூண்டுவதன் மூலமாக அவர்களை இரட்சிப் பதற்குத் தேவனுடைய ஆச்சரியமான திட்டத்தின் வெளிப்படுத்துதலைக் குறிக்கிறது. 25 மற்றும் 26ம் வசனங்கள், ஏற்கனவே பலமுறை கலந்துரையாடப்பட்ட நிகழ்வுவரிசையில் எவ்வாறு பொருந்து கிறது என்பதை ஆழ்ந்து சிந்தியுங்கள்:

யூதர்கள் ஒருபகுதி கடினப்படுதல்
(தேவனால் யூதர்கள் தள்ளிவிடப்படுதல்)

↓

புறஜாதியாரின் நிறைவு
(தேவனால் புறஜாதியார் ஏற்றுக்கொள்ளப்பட்டனர்)

↓

இஸ்ரவேலரெல்லாரின் இரட்சிப்பு
(தேவனால் யூதர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டனர்)

சிலர் ரோமர் 11:26ஐப் பற்றிய இந்த விளக்கமானது, *musterion* என்பது சில புதிய சத்தியத்தை அல்ல, ஆனால் பவுல் ஏற்கனவே வெளிப்படுத்தியுள்ள சத்தி யத்தைக் குறிப்பிடுவதாக்கும் என்று கூறி மறுப்புத் தெரிவிப்பார்கள். *Musterion* என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ள வசனப்பகுதிகளை ஆய்வுசெய்யுங்கள், அப்போது நீங்கள் பவுலின் வாசகர்களுக்கு நிச்சயமாகவே "ஒரு புதிய விஷயமாயிராத" கிறிஸ்துவைக் குறிப்பிடப் பவுல் அடிக்கடி *musterion* என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருப்பதைக் கண்டறிவீர்கள்.

*மற்றவர்கள், ரோமர் 11:25, 26க்கான எனது அணுகுமுறை, musterion என்ற வார்த்தையை உத்தரவாதப்படுத்திய போதிய அளவுக்கு நாடகத்துவ மாக இருப்பதில்லை என்று மறுப்பார்கள். பவுல், musterion என்ற வார்த்தையை கிறிஸ்துவுக்கும் சபைக்குமிடையே உள்ள உறவு போன்ற (எபேசியர் 5:32), "நாடகத்துவமற்றது" என்று சிலர் கருதக்கூடிய பல விஷயங்களைக் குறிப்பிடப் பயன்படுத்தினார். உண்மையில், தேவனுடைய சிந்தைக்குள் - தேவன் எவ்வாறு யூதர்களைத் தள்ளிவிடுதலைப் புறஜாதியார் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கும் அதன் எதிர்மாறுக்கும் பயன்படுத்த முடிந்தது என்பது பற்றிய - ஏவுதல் பெற்ற பவுலின் உட்கண்ணோக்கு, திகைக்க வைப்பதாகவும் நாடகத்துவமானதாகவும் உள்ளது! வில்லியம் ஹென்ரிக்சென் என்பவர், "இப்போது இது வார்த்தைகளுக்கான மிகவும் ஆச்சரியம் நிறைந்த விஷயமாக இருப்பதில்லையா? ... புறஜாதி யாருடைய இரட்சிப்பும் யூதர்களுடைய இரட்சிப்பும் ஒன்றையொன்று சார்ந்த நிலையிலிருத்தல் என்ற இந்தக் கருத்தானது தெய்வீக 'இரகசியத்தின்' கருப்பொருளாக உள்ளது" என்று எழுதினார்.[3]*

**மூலக்கூற்று: "யூதர்கள் இன்னமும் 'தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்களாக' இருக்கின்றனர்."**

*பிரச்சனையானது இஸ்ரவேல் மக்களினத்துடன் தேவனுடைய இன்றைய நாட்களின் உறவுபற்றிய தவறான புரிந்துகொள்ளுதலினால் மேலும் கூடுதலாக்கப் படுகிறது. ரோமர் 11:28ஆ, 29 வசனப்பகுதியானது, யூதர்கள் இன்னமும் "தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்களாக" உள்ளனர் என்பதற்கான உறுதிப் பாடாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. "தேவன் & இஸ்ரவேல்" என்ற கட்டுரையில், இஸ்ரவேல் மக்களுடன் தேவனுடைய உறவின் பொதுத்தலைப்பு கலந்துரையாடப்பட்டது மற்றும் "தேவனுக்கு மகிமை! (11:25-36)." என்ற பாடத்தில் 28, 29ம் வசனங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன. யூதர்கள் இனியும் தேவன்மீது எவ்வித விசேஷித்த உரிமைகோருதலையும் கொண்டிருப்பதில்லை என்பதை, நமது படிப்புகளில் நாம் திரும்பத் திரும்ப வலியுறுத்தியிருக்கிறோம். மக்களினம் என்ற வகையில் அவர்கள் இனியும் அவரது "விசேஷித்த மக்களாக" இருப்பதில்லை.*

## தவிர்க்க வேண்டிய நிலைப்பாடுகள்

**ஆயிரமாண்டுகள் முன்னரசாட்சி நிலைப்பாடு**

ரோமர் 11:25, 26 வசனப்பகுதியானது, அது *கூறுவதைக்* காட்டிலும் *கூறாதவற்றின்மீது* ஒரு நபர் அதிக தைரியமாயிருக்க முடியும் என்பது பற்றிய வசனப்பகுதிகளில் ஒன்றாக உள்ளது. *ஆயிரம் ஆண்டு முன்னரசாட்சிக் கொள்கைக் காரர்கள், இவ்வசனப்பகுதி போதிப்பதாகக் கூறுவதை இது போதிப்பது இல்லை* என்பதை முதலில் உறுதிப்படுத்த என்னை அனுமதியுங்கள்.

ஆயிரம் ஆண்டு முன்னரசாட்சிக் கொள்கையின் ஒரு காட்சியமைவு பின்வருவது போன்று செல்லுகிறது:[4] இயேசு பூமிக்கு வந்தபோது, எருசலேமில் உலகப்பிரகாரமான ஒரு ராஜ்யத்தை நிலைநாட்டுதலே அவரது விருப்பநோக்க மாக இருந்தது - ஆனால் இது அவர் யூதர்களினால் அரசராக ஏற்றுக் கொள்ளப்

படுதலைச் சார்ந்திருந்தது. யூதர்கள் இயேசுவை ஏற்றுக்கொள்வார்கள் என்று தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டிருந்தது, ஆனால் அவர்கள் இயேசுவை அரசராக ஏற்றுக்கொள்ளாததின் மூலமாகத் தேவனுடைய திட்டத்திற்கு இடையூறை ஏற்படுத்தினர். யூதர்கள் கடைசியில் இயேசுவை ஏற்றுக்கொள்ளும் வரையில் சபையானது ஒரு தற்காலிக நிவாரணமாக நிலைநாட்டப்பட்டது. இவ்விடத்தில்தான் நமது வேதபாட வசனப்பகுதி உள்ளாக வருகிறது. ஒரு நாளில் யூதர்கள் இயேசுவை ஏற்றுக்*கொள்வார்கள்* என்று ஆயிரம் ஆண்டு முன்னரசாட்சிக் கொள்கையாளர்கள் கூறுகின்றனர். (மரித்துப்போன எல்லா யூதர்களும் மரித்தோரிலிருந்து உயிர்ப்பிக்கப்பட்டு, பின்னர் மனமாறுவார்கள் என்றுகூட, ஆயிரம் ஆண்டு முன்னரசாட்சிக் கொள்கையாளர்களில் சிலர் நம்புகின்றனர். மேலும் சிலர், புதிதாக மனமாறிய இந்த யூதர்கள் வல்லமையான சுவிசேஷ ஊழிய சக்தியாக இருப்பார்கள் என்றும்கூட போதிக்கின்றனர்.) இந்த யூதத்துவ உயிர்ப்பித்தலானது பூமிக்குக் கிறிஸ்துவின் மறுவருகையைத் தொடங்கி வைக்கும், அந்த வேளையில் அவர் ஒரு உலகப்பிரகாரமான ராஜ்யத்தை அமைப்பார் என்று இவர்கள் உரிமைகோருகின்றனர்.

இந்தச் சிக்கலான கதைவரிசையில் பலவீனங்கள் ஏராளமாக உள்ளன.[5] இயேசு உலகப்பிரகாரமான ஒரு ராஜ்யத்தை அமைப்பதற்காக *வர வில்லை* (காண்க யோவான் 18:36). யூதர்கள் இயேசுவை ஒரு உலகப்பிரகார மான அரசராக ஏற்றுக்கொள்ள மனதா*யிருந்தனர்* (காண்க யோவான் 6:15), ஆனால் அவர்கள் அவரைத் தங்கள் *ஆவிக்குரிய* அரசராக ஏற்றுக்கொள்ள மனதில்லாதவர்களாயிருந்தனர். (ரோமர் 9:32, 33க்கான விளக்கவுரைகளைக் காணவும்.) சபையானது ஒரு பிந்திய சிந்தனையாகவோ அல்லது ஒரு "தற்காலிக நிவாரணமாகவோ" இருக்க*வில்லை* (காண்க எபேசியர் 3:10, 11); மாறாக, சபையானது, இயேசு நிலைநாட்ட வந்த ராஜ்யமாக உள்ளது. ("சபை" மற்றும் "ராஜ்யம்" ஆகியவை மத்தேயு 16:18, 19ல் ஒன்றுக்குப்பதில் இன்னொன்றாக எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதைக் காணவும்.) ஒருநாளில் எல்லா யூதர்களும் (அல்லது பெரும்பாலோர்) இயேசுவை ஏற்றுக்கொள்வார்கள் என்பதைப் பற்றி ஒரு கேள்வி கேட்கப்பட வேண்டும்: (ஆயிரம் ஆண்டு முன்னரசாட்சிக் கொள்கையாளர்களின் கூற்றுப்படி) யூதர்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ளாததன் மூலம், ஒருமுறை தேவனுடைய நோக்கத்திற்கு இடையூறு ஏற்படுத்தினர் என்றால், அவர்கள் எதிர்காலத்தில் இயேசுவை மீண்டும் புறக்கணிப்பதன் மூலம் தேவனுடைய திட்டத் திற்கு மீண்டும் இடையூறு ஏற்படுத்த மாட்டார்கள் என்று நாம் எவ்வாறு நிச்சய மாகக் கூற முடியும்?

ஆயிரம் ஆண்டு முன்னரசாட்சிக் கொள்கையாளர்களுடைய ரோமர் 11:25, 26ன் பயன்பாடு குறித்து மற்ற பலவீனங்களும் குறிப்பிடப்பட முடியும். எடுத்துக்காட்டாக (சிலர் போதிப்பதுபோல) இந்தப் பெரிய அளவிலான மன மாற்றத்திற்குப் பின்பு யூதர்கள் வல்லமையான சுவிசேஷ ஊழிய சக்தி யாக மாறுவார்கள் என்றால், புறஜாதியாருடைய "நிறைவு" ஏற்கனவே அடையப்பட்டிருக்கும் நிலையில் (அதாவது இரட்சிக்கப்படப்போகிற எல்லாப் புறஜாதியாருக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுவிட்ட நிலையில்), அவர்கள் [மனமாறிய யூதர்கள்] யாருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பார்கள்? இவ்வசனப்பகுதி போதிக்காத ஒன்றைப் *போதிப்பதாக* அவர்கள் உரிமை

கோருவதுதான் மாபெரும் பலவீனமாக உள்ளது. இதையே நாம் அடுத்ததாகக் கலந்துரையாடுவோம்.

**பிரபலமான ஒரு நிலைப்பாடு**

இந்தப் பாடத்தின் முன்னுரையில் நான் குறிப்பிட்டபடி, ஆயிரம் ஆண்டு முன்னரசாட்சிக் கொள்கையாளர்களுடன் அணிவகுத்து நிற்காத பல எழுத்தாளர்கள், யூதர்களின் பெருமளவு மனமாற்றமொன்று இருக்கும் என்று நமது வேதபாட வசனப்பகுதி போதிப்பதாக நம்புகின்றனர். இது எதிர் காலத்தில் ஒருதேதியில் (அனேகமாகக் கர்த்தருடைய மறுவருகைக்குச் சற்றுமுன்) ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான புறஜாதியார் கிறிஸ்தவர்களான பின்பு இது நடக்கும் என்று அவர்கள் எதிர்பார்க்கின்றனர். எந்த சூழ்நிலையிலும், *ஒவ்வொரு* யூதரும் இயேசுவினிடத்தில் வந்துவிடுவார் என கற்பனை செய்வது கடினமாக இருப்பதால், இந்த எழுத்தாளர்களில் பெரும்பான்மை யானவர்கள், "இஸ்ரவேலரெல்லாரும்" என்ற சொற்றொடரைச் சிலவழியில் தகுதிப்படுத்துகின்றனர். அவர்கள், "கணிசமான எண்ணிக்கை," "யூதர்களில் பெருமளவு" அல்லது "இஸ்ரவேல் முழுமையும்" என்பது பற்றிப் பேசுகின்றனர்.

வியப்புக்குரிய இந்த நிகழ்வு மிகச்சரியாக *எவ்வாறு* வரும் என்பது தெளி வற்றதாகவே உள்ளது. பெரும்பான்மையானவர்கள் இது *விசுவாசத்தின்* அடிப்படையில் இருக்க வேண்டும் என்று ஒப்புக்கொள்கின்றனர் (ரோமர் 3:30), ஆனால் ஒருசிலர், ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அவிசுவாசத்தில் இருந்த பின்னர், இயேசுவை விசுவாசிக்கும்படி அந்த எல்லா யூதர்களையும் ஒரேநேரத்தில் தூண்டுவது என்னவாக இருக்கும் என்று யூகிக்க மனவிருப்பமாக உள்ளனர். விளக்கவுரையாளர் ஒருவர், மேசியாவுக்காகப் பல நூற்றாண்டுகள் காத்திருந்ததால் சலிப்பு ஏற்பட்ட நிலையில் யூதர்கள், இயேசுவைப் பற்றிய ஒரு புதிய கண்ணோக்கத்தை மேற்கொள்ள மனதாயிருப்பார்கள் என்று கருத்துத் தெரிவித்தார். இருப்பினும், பெரும்பான்மையான எழுத்தாளர்கள், "எப்படி" என்பது "இரகசியத்தின்" ஒரு பாகமாக இருக்கிறது என்று கூறுகின்றனர்.

"நிறைவு" என்ற வார்த்தை "முழு எண்ணிக்கை" என்று அர்த்தப்படுகிறது என்பது பற்றி, சர்வவல்லவரான தேவன் விரும்பினால், (மனம்மாறும்) புறஜாதி யாருடைய மிகச்சரியான எண்ணிக்கையை அவரால் அறியமுடியும் என்பதை ஒப்புக்கொள்ள நான் மனவிருப்பமாக இருக்கிறேன். மேலும், இயேசுவைப் பின்பற்றுபவர்களில் பெரும்பான்மையானவர்களைப் போலவே நானும் யூதர்களில் பெருமளவு எண்ணிக்கையானவர்கள் கிறிஸ்தவர்களானால் நானும் மெய்சிலிர்ப்பவனாக இருப்பேன். இருப்பினும் நான், இந்தக் கருத்து எதுவும் ரோமர் 11:25, 26ல் போதிக்கப்பட்டுள்ளது என்று நம்புவதில்லை. அந்த முடிவை நான் அடைவதற்கான பல காரணங்களைப் பகிர்ந்துகொள்ள என்னை அனுமதியுங்கள்.

*(1) ஒரு சொற்றொடரை ஒருமுறை பயன்படுத்துதல் என்ற வகையில் சத்தியம் நிலைநாட்டப்படுவதில்லை.* பிரபலமான விளக்கத்தின்படி, பவுல் 25 மற்றும் 26ம் வசனங்களில், முன்பு ஒருக்காலும் வெளிப்படுத்தியி ராததும் பின்பு ஒருக்காலும் வேத வசனங்களில் கூறப்படாததுமான சத்தியங் களை வெளிப்படுத்தினார். ஆனால் வேதவசனங்கள் சத்தியத்தை இவ்விதமாக நிலைநாட்டுவ*தில்லை*. வேதாகமரீதியான அடிப்படை

சத்தியங்கள், ஏவுதல் பெற்ற திரும்பத் திரும்பக் கூறும் கூற்றுகளினால் பல்வேறு வசன அமைவுகளில் நிலைநாட்டப்பட்டன.

தெளிவற்ற வேதவசனங்களில், ஒரு வசனப்பகுதியை தனிமைப் படுத்துதலும் அதற்கு ஒரு மேம்போக்கான அர்த்தத்தைக் கொடுத்தலும், பல தவறான உபதேசங்களை விளைவித்துள்ளன. எடுத்துக்காட்டாக, ஆயிரம் ஆண்டு முன்னரசாட்சிக் கொள்கையாளர்கள், உயர்வான அடையாளத்துவமிகுந்துள்ள ஒரு புத்தகத்தில் (வெளிப்படுத்தின விசேஷத்தில்), ஒரு தனிவசனப்பகுதியிலிருந்து (வெளிப்படுத்தின விசேஷம் 20:1-5), "ஆயிரம் ஆண்டுகள்" என்ற சொற்றொடரை எடுத்து, அந்த உருவக மொழிநடையைச் சுற்றி, எல்லாவிதத்திலும் சூழும் ஒரு இறையியலைக் கட்டியெழுப்பினர். அதுபோலவே, ஒரு குழுவானது "மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் பெறுதல்" என்ற குறியீட்டுச் சொற்றொடரை (1 கொரிந்தியர் 15:29) எடுத்து, நம்ப இயலாத முறையில் மரித்தவர்களைப்பற்றிய விவரங்களை சேகரித்து, பதிலாளைக்கொண்டு ஞானஸ்நானங்களை நிகழ்த்துகிறார்கள். மீண்டுமாக நான் இது சத்தியத்தை நிலைநாட்டுவதற்கான *வழியல்ல* என்பதை வலியுறுத்துகிறேன்.

*(2) சந்தர்ப்பப்பொருளானது அப்படிப்பட்ட கருத்து எதையும் சுட்டிக் காண்பிப்பதில்லை.* இரண்டாவதாக, முந்திய வசனங்களில் தேவன் ஒருநாளிலே எல்லா யூதர்களையும் இரட்சிப்பார் என்பதற்குக் குறிப்புகள் எதுவும் இல்லை என்று நான் கருத்துத் தெரிவிக்கிறேன். ஹென்ரிக்ஸென் என்பவர் பின்வருமாறு விளக்கம் அளித்தார்,

> இஸ்ரவேலர்கள் ஒட்டுமொத்தமாக மனமாறுதல் என்ற கருத்திற்கு வாசகர் ஆயத்தப்படுத்தப்பட்டிருக்கவில்லை. நிருபத்தில் இதுவரையிலும் பவுல் அதற்கு நேரெதிரான கருத்தை, அதாவது எந்தக் காலத்திலும் (கடந்த, நிகழ், மற்றும் எதிர்காலத்தில்) *மீதியாயிருப்பவர்களுக்கு* இரட்சிப்பு என்பதையே வலியுறுத்துகிறார். ... ரோமர் 11:26ம் வசனம் யூதர்கள் பெருமளவில் மனமாறுதலைப் போதிக்கிறது என்றால், அது "நான் முன்பு கூறியதை மறந்துவிடுங்கள்" என்று பவுல் கூறுவதுபோலிராதா?[6]

ரோமர் 9-11ல் பவுல் யூதர்களைக் குறித்துக் கூறியது என்ன என்பதை மீண்டும் வாசியுங்கள். அந்த அப்போஸ்தலர் மாம்சத்தின்படி தமது இனத்தாரான தமது சகோதரர்கள் இழந்துபோகப்பட்டிருந்ததைக் குறித்து "மிகுந்த துக்கமும் இடைவிடாத மனவேதனையும்" கொண்டிருந்தார் (9:1-3; 10:1). அவர் "சிலரையாவது இரட்சிக்க" வேண்டும் என்று ஏங்கியிருந்தார் (11:13). அவர்கள் அவிசுவாசத்தில் தொடர்ந்து நிலைத்திராதிருந்தால், அவர்கள் மீண்டும் தேவனுடைய திட்டங்கள் மற்றும் நோக்கங்களில் உள்ளடக்கப்படுவார்கள் (''ஒட்டவைக்கப்படுவார்கள்''; 11:23) என்று அவர் வலியுறுத்தினார். விரைவிலேயே எதிர்காலத்தில் எல்லா யூதர்களும் தங்கள் அவிசுவாசத்தைத் தூக்கியெறிவார்கள் என்பதற்கு மிகலேசான குறிப்பைக்கூட கொடுக்கவில்லை.

*(3) இந்தப் போதனை "யூதத்துவப் பிரச்சனைக்கு" தீர்வு எதையும் அளிப்பதில்லை.* மூன்றாவது, ரோமர் 11:25, 26ன் மீதான பிரபலமான நிலைப்பாடு, நாம் "யூதத்துவப் பிரச்சனை" என்று அழைத்திருக்கிற விஷயத்தை - தேவன் இஸ்ரவேல் மக்களினத்திற்கான தமது வாக்குத்தத்தங்களைத் தொடரத்தவறினாரா

இல்லையா என்பதை - உண்மையில் கையாள்வதில்லை. பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகிற இந்த அணுகுமுறையைப் பரிந்துரைப்பவர்கள், தங்களின் விளக்கமானது, கிறிஸ்துவின் மறுவருகைக்குச் சற்றுமுன் வரையிலுமுள்ள சந்ததியில் வாழும் யூதர்கள் எல்லாரையும் (அல்லது "ஒரு கணிசமான எண்ணிக்கையானவர்களை") தேவன் இரட்சிப்பார் என்பதால், அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார் என்று நிரூபிப்பதாக வலியுறுத்துகின்றனர். இருப்பினும், அந்தக் கடைசி சந்ததிக்கு முன்பு வரையிலும் அவிசுவாசத்தில் வாழ்ந்திருந்து அவிசுவாசத்திலேயே மரித்துப்போன எண்ணற்ற யூதர்களைப் பற்றிய விஷயம் என்ன? "இஸ்ரவேலரெல்லாரும்" என்பது பல பல தலைமுறைகள் கிறிஸ்துவுக்குப் புறம்பே இருந்து மரித்த பின்பு, கடைசி சந்ததியில் பெரும்பான்மையானவர்களைக் குறிக்கும் வினோதமான வழி என்று குறிப்பிடப்பட்டுள்ளது.[7] "யூதத்துவப் பிரச்சனையைப்" பொறுத்தமட்டில், ஜிம் மெக்கைகன் என்பவர் பின்வருமாறு எழுதினார்,

> [பவுல்] இங்கு கருத்தாகத் தெரிவிக்காத விஷயம் பின்வருமாறு: "இப்போதிலிருந்து ஒருசில ஆயிரம் ஆண்டுகளுக்குப்பின்பு, தேவன் பெருமளவில் யூதர்களின் ஒரு முழுத் தலைமுறையையும் விசுவாசித்தலுக்கும் அதன் விளைவாக இரட்சிப்புக்கும் கொண்டுவரும் காலத்தில் உங்கள் பிரச்சனைக்குப் பதில் தரப்படும்." அது ஒரு பதில் என்பதாகவே இராது. ... அப்படிப்பட்ட ஒரு பதில் அந்தத் தலைமுறைக்கு முன்பு வரை இருந்த யூதர்களின் பிரச்சனையைக் கையாள்வதாக இராது.[8]

ரோமர் 9-11ல் குறிப்பிடப்பட்டுள்ள "யூதத்துவப் பிரச்சனை" என்பது, பவுலின் தலைமுறையிலிருந்த யூதர்களுக்கு நேரடித் தொடர்புடையதாகும். தேவன் *அந்த* யூதர்களுக்கு ஆதரவாக இருந்தாரா இல்லையா என்பது பற்றியெரியும் கேள்வியாக இருந்தது. எதிர்காலத்தில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின்பு கர்த்தர் என்ன செய்வார் அல்லது செய்யமாட்டார் என்பது அவர்களுக்குச் சம்பந்தம் இல்லாததாக இருந்தது.

*(4) யூதர்களின் ஒட்டுமொத்த மனமாற்றம் என்பது, வேதாகமத்தின் வேறிடமெங்குமுள்ள போதனைக்கு நேர்மாறானதாக உள்ளது.* மறைபொருளான வசனப்பகுதியொன்றை எடுத்து வேதாகமரீதியாக விளக்கப்படுத்துதலுக்கு அதை ஒருவர் வேதவசனங்களில் வேறெங்குமுள்ள எளிதான உபதேசத்திற்கு நேர்மாறாகப் பொருள்தரும் வகையில் பயன்படுத்தக்கூடாது என்பது வேதாகம விளக்கத்திற்கு ஒரு அடிப்படைக் கொள்கையாக உள்ளது. ஏற்கனவே குறிப்பிடப்பட்டபடி, ஒருநாளில் தேவன் எல்லா (அல்லது பெரும்பான்மையான) யூதர்களை இரட்சிப்பார் என்பது, யூதர்களில் மீதியாயிருப்பவர்களையே தேவன் இரட்சிப்பார் என்ற பவுலின் எளிமையான போதனைக்கு நேர்மாறானதாக உள்ளது (9:27; 11:5).

மேலும், பின்வருவதை ஆழ்ந்து சிந்தியுங்கள்: யூதர்களின் "நிறைவு" (*pleroma*) என்பது (11:12), இயேசுவின் மறுவருகைக்குச் சற்றுமுன்பு பெரும்பான்மையான யூதர்கள் இரட்சிக்கப்படுவதைக் குறிக்கும் என்றால், "புறஜாதியாரின் நிறைவு [*pleroma*]" என்பது (வசனம் 25), பெரும்பான்மையான புறஜாதியாரின் இரட்சிப்பானது பெரும்பான்மையான யூதர்கள் இரட்சிக்கப்படும் வேளைக்குச்

சற்றே முன்னதாக இருக்கும் என்று குறிப்பிடுவதாகக் கற்பனை செய்துகொள்வது நியாயமானதாகவே உள்ளது. அப்படிப்பட்ட முடிவானது, லூக்கா 18:8ஆவில் உள்ள இயேசுவின் கேள்வியை அபத்தமாக்குவதாக இருக்கும்: "ஆகிலும் மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ?"

நம்மில் யாவரும், பூமியில் பெரும்பான்மையான மக்கள்தொகையினர் (யூதர்கள் மற்றும்/அல்லது புறஜாதியார்) இரட்சிக்கப்படும் வாய்ப்பில் நிச்சய மாகவே அகம் மகிழ்வோம் - ஆனால் விஷயம் அப்படி*யிராது* என்று இயேசு[வே] கூறினார். அவர், "அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர் களோ *சிலர்*" (மத்தேயு 22:14; என்னால் வலியுறுத்தப்படுகிறது). மலைப்பிரசங் கத்தில் அவர் இரு வழிகளைப் பற்றிப் போதித்தார், அதில் ஜீவனுக்குப் போகிற வழியைச் சிலரே பின்பற்றுவர் என்று அவர் சுட்டிக்காண்பித்தார்:

> "இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் *சிலர்*" (மத்தேயு 7:13, 14; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

பிரபலமான நிலைப்பாட்டைப் புறக்கணிப்பதற்கு மற்ற காரணங்களையும் குறிப்பிடமுடியும். உதாரணமாக, ரோமர் 11:25, 26ஐப் பற்றிய இந்தக் கண்ணோட்டமானது, *நாடளாவிய* இரட்சிப்பைப் போதிக்கிறது என்ற வகையில் எடுத்துக்கொள்ளப்பட முடியும். இரட்சிப்பைப் பொறுத்தவரையில் தேவன் மனித குலத்தை நாடளாவிய அல்லது குழு அடிப்படையில் ஒருபோதும் கையாளவில்லை, ஆனால் எப்பொழுதுமே *தனிநபர்* அடிப்படையிலேயே கையாண்டிருக்கிறார். ஆகையால் நாம் ரோமர் 11:25, 26 வசனங்கள், இரண்டாம் வருகைக்கு முன்பு "இஸ்ரவேலரெல்லாரும்" இரட்சிக்கப்படுவார்கள் என்பதாக போதிக்கிறது என்ற கருத்தைப் புறக்கணித்தாக வேண்டும்.

**பிறழ்வுபட்ட ஒரு நிலைப்பாடு**

பிரபலமான கண்ணோட்டத்தில் ஒரு பிரச்சனை உள்ளாக மறைந் துள்ளதைப் பெரும்பான்மையான எழுத்தாளர்கள் கண்டிருக்கின்றனர்: யூதர் களின் ஒட்டுமொத்த மனமாற்றம் *எவ்வாறு* நடைபெறும்? ஏற்கனவே குறிப்பிட்டபடி பலர், "எவ்வாறு" என்பதை "இரகசியத்தில்" உள்ளடக்கி யுள்ளனர். இருப்பினும், சமீபத்திய ஆண்டுகளில், நாமகரணக்கூட்டங்களைச் சேர்ந்த, வளரும் எண்ணிக்கையிலான எழுத்தாளர்கள், இன்றைய நாட்களின் யூதர்கள், இயேசுவை விசுவாசிக்காமலேயே நியாயப்பிரமாணத்தைப் பின்பற்று வதால்[கூட] இரட்சிக்கப்பட முடியும் என்று வலியுறுத்துவதன் மூலம் இந்தப் பிரச்சனையை "தீர்க்க" முயற்சி செய்துள்ளனர். அவர்கள், "இரட்சிப்பின் புறஜாதித்தடம்" மற்றும் "இரட்சிப்பின் யூதத்தடம்" என்பவை பற்றிப் பேசு கின்றனர். அவர்கள் புறஜாதிகளுக்கு "கிறிஸ்துவின் உடன்படிக்கை" ஒன்றும் யூதர் களுக்கு "தோரா உடன்படிக்கை" ஒன்றும் இருப்பதாகக் கூறுகின்றனர். "*இவ்வாறு* இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள்" என்று அவர்கள் வலியுறுத்து கின்றனர்.

திகைக்க வைக்கும் இந்த நிலைப்பாட்டைப் பற்றி நீங்கள் அறிய வேண்டும் என்பதற்காகவே நான் முதன்மையாக இதைக் குறிப்பிடுகிறேன். இன்றைக்கான சத்தியம் உலக ஊழியப்பள்ளியின் மாணவர்கள், பவுலின் செய்தியிலிருந்து இது எவ்வளவு பிறழ்வான நிலையாயிருக்கிறது என்பதை அறிவார்கள். ரோமருக்கு எழுதிய நிருபத்தில் அப்போஸ்தலர், யூதர்களும் புறஜாதிகளும் ஒன்றுபோலவே *இழந்துபோகப்பட்டுள்ளனர்* என்றும் ஒரே வழியிலேயே *இரட்சிக்கப்படுவார்கள்* என்றும் கருத்தை நிலைநாட்டினார். தேவன் நமக்கு இரட்சிப்பிற்கான இரு வழிகளைக் கொடுத்திருக்கவில்லை, ஆனால் ஒரே ஒரு வழியையே அவர் நமக்குக் கொடுத்திருக்கிறார். இயேசு, "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்று கூறினார் (யோவான் 14:6). 11:25, 26ன் உடனடி சந்தர்ப்பப்பொருளில், தேவன் இரு"ஒலிவமரங்களை" (யூதர்களுக்கு ஒன்று மற்றது புறஜாதியாருக்கு ஒன்று) அல்ல ஆனால் *ஒரே ஒரு* ஒலிவமரத்தையே ஆசீர்வதிப்பார் என்று காண்கிறோம்.

## ஆழ்ந்து சிந்திக்கச் சாத்தியக்கூறுகள்

வேதவசனப்பாடப்பகுதி எதைப் போதிப்ப*தில்லை* என்பதை நாம் கலந்துரையாடினோம். இது *கூறுவது* என்ன என்பதை ஆழ்ந்து சிந்திக்கும் வேளை இப்போது வந்துள்ளது.

### பதில் அளிக்கப்பட வேண்டிய ஒரு கேள்வி

நமது விளக்கத்தின்மீது செல்வாக்குச் செலுத்தவிருக்கும் ஒரு கேள்வி பின்வருமாறு: *"26ம் வசனத்தில், 'இஸ்ரவேல்' என்பது யாரைக் குறிக்கிறது?"* 26ம் வசனத்தில், "இஸ்ரவேல்" என்பது ஆவிக்குரிய இஸ்ரவேலை - வேறுவார்த்தைகளில் கூறுவதென்றால், சபையை அர்த்தப்படுத்துகிறது என்பது கடந்த காலத்தில் மிகவும் பிரபலமான விளக்கங்களில் ஒன்றாக இருந்தது.[9] இது சாத்தியமாக உள்ளது. வேறொரு இடத்தில், பவுல் சபையை "இஸ்ரவேல்" என்று குறிப்பிட்டார் (காண்க கலாத்தியர் 6:16), மற்றும் இந்தக் கண்ணோட்டமானது, வேதாகமத்தின் மற்ற இடங்களிலுள்ள போதனையை மீறுவதில்லை. இருப்பினும், இந்த நிலைப்பாட்டில் ஒரு அடிப்படைப் பலவீனம் உள்ளது. நாம் படித்து கொண்டிருக்கும் இந்தப் பகுதியில் பவுல் இஸ்ரவேலைப் பற்றித் திரும்பத் திரும்பப் பேசினார், மற்றும் அவ்வாறு பேசிய ஒவ்வொரு முறையும் அவர் மாம்சப்பிரகாரமான இஸ்ரவேலையே தமது சிந்தையில் கொண்டிருந்தார். மற்றும், இந்த அப்போஸ்தலர் 25ம் வசனத்தில் மாம்சப்பிரகாரமான இஸ்ரவேலைத்தான் தெளிவாகக் குறிப்பிட்டார் - மற்றும் 26ம் வசனம், அதற்கு முந்திய வசனத்தில் தொடங்கப்பட்ட வாக்கியத்தின் தொடர்ச்சியாக உள்ளது. 26ம் வசனத்திலுள்ள "இஸ்ரவேலை" மாம்சப்பிரகாரமான இஸ்ரவேல் என்று விளக்கப்படுத்துவது இயல்பானதாகக் காணப்படுகிறது.

இது இன்னமும் பவுல் மாம்சப்பிரகாரமான எல்லா இஸ்ரவேலரையும் (நாம் பயன்படுத்திக்கொண்டிருந்த வரைபடத்திலுள்ள பெரிய வட்டம்[10]) தமது சிந்தையில் கொண்டிருந்தாரா அல்லது "இஸ்ரவேலுக்குள்ளிருந்த இஸ்ரவேலரை" (காண்க 9:6) தமது சிந்தையில் கொண்டிருந்தாரா? என்ற

*கேள்வியைப் பதில் அளிக்காமலேயே விட்டுவைப்பதாக உள்ளது. நிச்சயமாகப் பவுல் 25ம் வசனத்தில், மாம்சப்பிரகாரமான எல்லா இஸ்ரவேலரையும் தமது சிந்தையில் கொண்டிருந்தார். மேலும், "இரட்சிக்கப்பட்ட எல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள்" என்று கூறுதல் தேவையற்றதாக இருக்கும்.*

*எனவே, ரோமர் 11:26ல் "இஸ்ரவேல்" என்பதன் அடையாளத்துவம் பற்றி மூன்று கண்ணோட்டங்கள் சாத்தியமாவைகளாக உள்ளன: (1) ஆவிக்குரிய இஸ்ரவேல் (சபை), (2) பொதுவாக மாம்சப்பிரகாரமான இஸ்ரவேல் மற்றும் (3) "இஸ்ரவேலுக்குள் இஸ்ரவேல்" (இயேசுவை மேசியா என்று ஏற்றுக்கொண்ட யூதர்கள், "உண்மையான இஸ்ரவேல்"). இரண்டாவது கண்ணோட்டமே எனது விருப்பத் தேர்வாக உள்ளது. இருப்பினும், இந்த மூன்று கண்ணோட்டங்களுமே நியாயமானவைகளாக இருப்பதால் மற்றும் இவை எதுவும் வேறு எவ்விடத்திலுமுள்ள ஏவுதல் பெற்ற போதனையை மீறாதிருப்பதால், பவுல் தமது சிந்தையில் கொண்டிருந்தது என்ன என்பது பற்றி நாம் உபதேசரீதியாக எதுவும் கூற இயலாது. இந்தக் கண்ணோட்டங்கள் - சற்றே மாறுபட்ட வழிகளில் - ஒரே அடிப்படை முடிவை அடையப் பயன்படுத்தப்பட முடியும்.*

**ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய ஒரு விளக்கம்**

*கூறப்பட்டுள்ளவற்றைச் சிந்தையில் கொண்டவர்களாக நாம், 11ம் அதிகாரத்தில் பவுலின், எல்லாவற்றையும் உள்ளிட்ட கூற்று, உடனடி சந்தர்ப்பப் பொருள் மற்றும் பொதுவான வேதாகமக் கருத்துகள் ஆகியவற்றுடன் ஒத்திருக்கும்படியான, ரோமர் 11:25, 26ன் ஒரு விளக்கத்தை ஒன்றுகூட்டி வைக்க முயற்சி செய்வோம். பவுல், "மேலும், [புறஜாதி] சகோதரரே, ... ஒரு இரகசியத்தை நீங்கள் அறியவேண்டுமென்றிருக்கிறேன்" (வசனம் 25அ) என்று துவங்கினார். முன்பே குறிப்பிட்டபடி "இரகசியம்" என்பது புறஜாதியாரைத் தேவன் ஏற்றுக்கொண்ட விஷயத்தை, அவர் [தேவன்] இஸ்ரவேல் மக்கள் தம்மிடத்தில் திரும்பிவரும்படி அவர்களை ஊக்குவிப்பதற்கு எவ்வாறு பயன்படுத்திக்கொள்ள இயலும் என்பதைப் பற்றிப் பவுல் வெளிப்படுத்தியிருந்தவற்றை அர்த்தப்படுத்துகிறது: "எனவே [புறஜாதியாரான] நீங்கள் உங்களையே புத்திமான்களென்று எண்ணாதபடிக்கு [பெருமை பாராட்டாதபடிக்கு] (வசனம் 18) அல்லது மேட்டிமைச் சிந்தை உள்ளவர்களாக (வசனம் 20 ) இருக்க மாட்டீர்கள்" (வசனம் 25அ).*

*பின்பு பவுல் தமது பிரதான சிந்தனையை விட்ட இடத்திலிருந்து திரும்பவும் தொடங்கினார்: "நீங்கள் ... ஒரு இரகசியத்தை ... இஸ்ரவேலரில் ஒரு பங்குக்குக் கடினமான மனதுண்டாயிருக்கும்" (வசனம் 25). "இஸ்ரவேல்" என்பது இவ்விடத்தில் மாம்சப்பிரகாரமான இஸ்ரவேலை (பெரிய வட்டத்தை) குறிக்கிறது. "ஒரு பங்குக்குக் கடினமான மனது" என்பதை நீங்கள் வாசிக்கும்போது, இங்கு உரைக்கப்பட்ட இஸ்ரவேலர்களில் யாரேனும் "ஒருபங்கு கடினமான மனது கொண்டிருந்தார்" என்று மாத்திரம் நினைத்துவிடாதீர்கள்; மாறாக, இஸ்ரவேல் நாட்டின் மக்கள் தொகையில்* ஒருபங்கினர் *கடினப்பட்டிருந்தனர் என்ற வகையில் நினைத்துப் பாருங்கள்.* RSV *வேதாகமத்தில்,* "a hardening has come upon part of Israel" *என்றுள்ளது. 7ம் வசனத்தில் பவுல், "அப்படியானால் என்ன? [பெரிய வட்டத்திலுள்ள] இஸ்ரவேலர் தேடுகிறதை [தேவனுடன் சரியாக நிற்குதலை] அடையாமலிருக்கிறார்கள்; மற்றவர்கள் [சிறிய*

வட்டத்திலுள்ளவர்கள் தவிர பெரிய வட்டத்திலுள்ள யாவரும்] இன்றையத் தினம்வரைக்கும் கடினப்பட்டிருக்கிறார்கள்" என்று கூறியிருந்தார்.

"ஒரு பங்குக்குக் கடினமான மனது" "புறஜாதியாருடைய நிறைவு உண்டாகும்வரைக்கும்" மேலோங்கியிருக்கும் (வசனம் 25ஈ). "நிறைவு" என்பது 12ம் வசனத்திலுள்ள "நிறைவு" என்பதற்கான (*pleroma* என்ற) அதே கிரேக்க வார்த்தையிலிருந்து வந்துள்ளது.[11] பல எழுத்தாளர்களும், கல்வியாளர்களும் மற்றும் மொழிபெயர்ப்பாளர்களும், *pleroma* என்ற வார்த்தைக்கு, 12ம் வசனத்தில் உள்ளதைக் காட்டிலும் வேறுபட்ட ஒரு அர்த்தத்தை 25ம் வசனத்தில் குறிப்பிடுவது எப்படி என்று நான் திகைப்பு அடைந்தேன். இவர்களில் பெரும்பான்மை யானவர்கள், 25ம் வசனத்தில், *pleroma* என்பது "முழு எண்ணிக்கை" என்று அர்த்தப் படுவதாக வலியுறுத்துகின்றனர்.

மாறுபட்ட அமைவுகளில் கிரேக்க வார்த்தைகள் மாறுபட்ட அர்த்தங்களைக் கொண்டிருக்கச் சாத்தியம் உள்ளது. இருப்பினும், ஒரு வார்த்தையை மாறுபட்ட வகையில் விளக்கப்படுத்துவதற்கு, பலத்த காரணங்கள் இல்லாதவரையில், ஒரே சந்தர்ப்பப்பொருளில் அந்த வார்த்தை வரும் ஒவ்வொரு இடத்திலும், ஒரே அர்த்தத்தைக் குறிப்பிடுதல் என்பதே வழக்கமான நடைமுறையாக உள்ளது. *Pleroma* என்ற வார்த்தை, 12ம் வசனத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளதிலிருந்து மாறு பட்ட வகையில் 25ம் வசனத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று முடிவு செய்ய வற்புறுத்தும் காரணம் எதையும் நான் அறிவதில்லை. நாம் 12ம் வசனத்தைப் படித்தபோது, *pleroma* ("நிறைவு") என்பது "மீறுதல்" மற்றும் "தவறுதல்" என்பதற்கு நேர்மாறானதாக இருந்தது என்று குறிப்பிட்டோம். மேலும், நாம் 12ம் வசனம், மீறுதல் மற்றும் தவறுதல் ஆகியவற்றின் விளைவு களையும் ("தேவனால் தள்ளிவிடப்படுதல்") நிறைவையும் ("தேவனால் ஏற்றுக் கொள்ளப்படுதல்") கொடுக்கிற 15ம் வசனத்துடன் இணையாக உள்ளது என்றும் கவனித்தோம்.

| ரோமர் 11:12 | | ரோமர் 11:15 |
|---|---|---|
| மீறுதல், தவறுதல் | தேவனைத் தள்ளிவிடுதல் | (தேவனால்) தள்ளிவிடப்படுதல் |
| நிறைவேற்றம் | தேவனை ஏற்றுக்கொள்ளுதல் | (தேவனால்) ஏற்றுக்கொள்ளப்படுதல் |

12ம் வசனத்தில் "நிறைவு" என்பது யூதர்கள் தேவனால் ஏற்றுக்கொள்ளப் படுதலை விளைவிக்கும் வகையிலான, தேவனுடைய நோக்கத்தை யூதர்கள் நிறைவேற்றுதல் என்று அர்த்தப்படுகிறது என்பதாக நாம் முடிவுசெய்தோம். அதே அடிப்படை அர்த்தம் 25ம் வசனத்திற்கும் ஏற்புடையதாக உள்ளது: "இஸ்ரவேலின் ஒரு பங்கானது [பெரிய வட்டத்திலுள்ள] அவர்களின் மனக்கடினமானது தேவனுடைய நோக்கமும், புறஜாதியார் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுதலும் நிறைவேறுதலை விளைவிக்கும் வரை கடினப்பட்டது." 11ம் அதிகாரத்தில் பவுலின் முதன்மை விவாதவரிசையின் வெளிச்சத்தில், 25ம் வசனத்தை மீண்டும் கண்ணோக்குங்கள்:

*(தேவனால்) யூதர்கள் தள்ளிவிடப்படுதல்*
*("கடினப்படுதல்")*

↓

*(தேவனால்) புறஜாதியார் ஏற்றுக்கொள்ளப்படுதல்*
*("நிறைவு")*

*இரட்சிப்பைப் பொறுத்தமட்டில் யூதர்களுக்கும் புறஜாதியாருக்குமிடையிலுள்ள உள் உறவைப் பவுல் திரும்பவும் வலியுறுத்தினார் என்றால், அவரது அடுத்த கருத்து என்னவாக இருக்க வேண்டும்? இந்த புறஜாதியாரின் "நிறைவு" என்பது யூதர்கள் மேசியாவைப் பற்றி முன்னதாகக் கொண்டிருந்த தங்கள் கருத்துக்களைக் கைவிட்டு, இயேசுவை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்படும்படி, அவர்களுக்குள் வைராக்கியத்தைத் தூண்டி எழுப்புவதே, புறஜாதியாரின் இந்த "நிறைவேற்றம்" நோக்கமாகக் கொண்டிருந்தது என்பதை, அவர் ஏதாவது ஒருவழியில் வலியுறுத்த வேண்டும். பவுல் அதைச் செய்தாரா? நாம் வேதபாட வசனப்பகுதியில் தொடர்ந்து செல்வோமாக.*

*26ம் வசனம், "இந்தப்பிரகாரம் ..." என்று தொடங்குகிறது (வசனம் 26அ). "இந்தப் பிரகாரம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை outos என்பதாகும். "So" என்ற ஆங்கில வார்த்தையைப் போலவே, outos என்பதும் நடைவகையின் வினையுரிச்சொல்லாகும், இது "இந்தவகையில்"[12] அல்லது "இவ்வாறாக"[13] என்று அர்த்தப்படுகிறது. "இந்தப்பிரகாரம்" - இந்த வகையில் (தேவனால் புறஜாதியார் ஏற்றுக்கொள்ளப்படுதலினால்) - "இஸ்ரவேலரெல்லாரும் [வைராக்கியம் கொள்ளும்படி இயக்கப்பட்டு, கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, அதனால்] இரட்சிக்கப்படுவார்கள்."*

*(தேவனால்) யூதர்கள் தள்ளிவிடப்படுதல்*
*("கடினப்படுதல்")*

↓

*(தேவனால்) புறஜாதியார் ஏற்றுக்கொள்ளப்படுதல்*
*("நிறைவு")*

↓

*(தேவனால்) யூதர்கள் ஏற்றுக்கொள்ளப்படுதல்*
*("இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள்")*

*நான் ஒரு கேள்வியை முன்னெதிர் நோக்குகிறேன், "ஆனால் நீங்கள் 'எல்லாரும்' என்ற வார்த்தை பற்றி எதுவும் கூறவில்லையே. 'எல்லாரும்' என்ற வார்த்தை, யூதர்களில் எல்லாரும் (அல்லது குறைந்தபட்சம் பெரும்பான்மையானவர்கள்) கடைசியில் இயேசுவை ஏற்றுக்கொள்வார்கள் என்று குறிப்பதில்லையா?" அவ்வாறிருக்க அவசியமில்லை. நான், "ஒவ்வொருவரும் விசுவாசித்து, மனந்திரும்பி, அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற*

வேண்டும் என்று தேவன் கட்டளையிட்டிருக்கிறார்; இவ்வாறே எல்லா மக்களும் இரட்சிக்கப்படுவார்கள்" என்று கூறினால் அதைப்பற்றிய விஷயம் என்னவாக இருக்கும்? இதிலிருந்து நீங்கள், "எல்லா மக்களும் இரட்சிக்கப்படு வார்கள்" என்று முடிவுசெய்வீர்களா? இல்லை, தேவன் கட்டளையிட்டுள்ள வற்றைச் செய்வதால் மாத்திரம் இரட்சிக்கப்பட *முடியும்* என்பது எவரொருவருக்கு மான ஒரே வழியாக உள்ளது என்று நான் அர்த்தப்படுத்துவதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள்.

"ஆனால் ரோமர் 11:25, 26ஐப் பற்றிய உங்கள் விளக்கம் மாறுபட்ட வார்த்தைகளில் பவுலை அவர் கூறியதையே திரும்பக் கூறுபவராக்குகிறதே" என்று சிலர் மறுக்கலாம். பவுல் பல திறவுகோல் வார்த்தைகளை - மீண்டும் மீண்டும் மீண்டும் - திரும்பக் கூறினார் என்பதை அறியாமல், ரோமருக்கு எழுதிய நிருபத்தில் நீங்கள் இவ்வளவு தூரம் கடந்து வந்திருக்க முடியாது. ஆகவே, 11ம் அதிகாரத்தின் திறவுகோல் சிந்தனையைப் பவுல், 25, 26ம் வசனங்களில் திரும்பக் கூறுவதில் பிரச்சனை எதையும் நான் காண்பது இல்லை.

## முடிவுரை

நான் ரோமர் 11:25, 26ன் "அடிக்கட்டையை" இவ்வாறே கையாளுகிறேன். புறஜாதியாரைத் தேவன் ஏற்றுக்கொண்டதன் வழியாக, யூதர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்படும்படி அசைக்கப்பட்டிருக்கலாம். அதாவது, இஸ்ரவேல் மக்கள், சுவிசேஷத்தைப் புறஜாதியார் ஏற்றுக்கொண்டதற்கு மறு செயல் "செய்யும் வகையில்" சுவிசேஷத்தைத் திரும்பவும் கண்ணோக்கி கிறிஸ்தவர் களாவதற்கு முடிவு செய்யலாம். நான் கூறியுள்ளதை ஆழ்ந்து சிந்தியுங்கள், அது வேதவசனத்தின் நிபந்தனைகளைச் சந்திக்கிறதா இல்லையா என்பதைக் கண்டறி யுங்கள். பின்பு தொடர்ந்து படித்து, ஜெபித்து, உங்கள் சொந்த முடிவுகளை அடையப் பெறுங்கள்.

மீண்டும் ஒருமுறை, நாம் ரோமருக்கு எழுதிய நிருபத்தில் கடின மான வசனப்பகுதியொன்றுடன் போராடியிருக்கிறோம். இருப்பினும், ஒரு வசனப் பகுதி எவ்வளவு கடினமாக இருக்கிறதோ, அவ்வளவுக்கு அது நமது சொந்த இரட்சிப்பில் குறைவான செயல்தாக்கம் கொண்டிருக்கக் கூடியதாக உள்ளது. இரட்சிக்கப்படுவதற்கு நீங்களும் நானும் என்ன செய்ய வேண்டும் என்றும், கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம் எவ்வாறு வாழ வேண்டும் என்றும் கூறும் வசனப்பகுதிகளில் பெரும்பான்மையான பகுதியானது தெளிவாகவும் நேர்மையான இருதயங்கள் புரிந்துகொள்ளக்கூடிய வகையிலும் உள்ளது. அதற்காகத் தேவனுக்கு நன்றி!

## பிரசங்கியார்கள் மற்றும் போதகர்களுக்கான குறிப்புகள்

*Pleroma* என்பது பற்றி இன்னும் ஒருசில சிந்தனைகள், ஒருபோதகர் அல்லது பிரசங்கியார் என்ற முறையில் உங்களுக்கு உதவியாயிருக்கலாம். ரோம ருக்கு எழுதிய நிருபம் முழுவதிலும், *pleroma* என்பதன் பெயர்ச்சொல் மற்றும் வினைச்சொல் வடிவங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன (எடுத்துக்காட்டாக, காண்க 1:29; 8:4; 13:8, 10; 15:13, 14, 29), மற்றும் "குறிப்பிட்ட எண்ணிக்கை"

*அல்லது "ஒரு அமைவான எண்ணிக்கை" என்பதன் கருத்தானது இவற்றில் எதிலும் உள்ளானதாக இருப்பதில்லை. இருப்பினும், சில எழுத்தாளர்கள், pleroma என்பதை "இரட்சிக்கப்படுகிறவர்களின் முழு எண்ணிக்கை" என்று அர்த்தப்படும் வகையில், பின்வரும் வலியுறுத்தத்துடன் பயன்படுத்துகின்றனர்: "இரட்சிக்கப்பட வேண்டிய ஒவ்வொருவரையும் தேவன் இரட்சிப்பார்; அவர் ஒருவரைக்கூடத் தவறவிடமாட்டார்." Pleroma என்ற வார்த்தைக்கு, இந்தப் பொதுவான, நேரெதிர்க்கருத்துகளற்ற அணுகுமுறையைப் பற்றி எனக்குப் பிரச்சனை எதுவும் இல்லை.*

---

குறிப்புகள்

[1]*அமெரிக்க ஐக்கிய நாட்டில் தொடக்ககால மீளக்கட்டுவிக்கும் இயக்கத்தின் விரைவான பரவுதலானது மக்களில் சிலரை மிகைநம்பிக்கையாளர்கள் ஆக்கிற்று. புறஜாதியார் மற்றும் யூதர்களில் மாபெரும் எண்ணிக்கையானவர்கள் மிகவும் அண்மையிலிருந்த எதிர்காலத்திலேயே சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிவார்கள் என்று அவர்கள் சுலபமாக நம்ப முடிந்தது.* [2]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 424. [3]William Hendriksen, *Exposition of Paul's Epistle to the Romans,* New Testament Commentary (Grand Rapids, Mich.: Baker Book House, 1982), 378. [4]*இந்தப் புத்தகத்தில் காணப்படும் "ஆயிரம் ஆண்டு முன்னரசாட்சிக் கண்ணோட்டம்" என்ற வரைவட்டவணையில் காணவும்.* [5]*ஆயிரம் ஆண்டு முன்னரசாட்சிக் கொள்கையை இன்னும் அதிக ஆழமாக நீங்கள் படிக்க விரும்பினால் டேவிட் ரோப்பர் எழுதிய* வெளிப்படுத்தின விசேஷம், 1 *என்ற விளக்கவுரைப் புத்தகத்தில் "நன்கு தொடங்கப்பட்டது பாதி முடிந்ததாக உள்ளது" என்ற பாடத்தில் காணவும்.* [6]Hendriksen, 379. [7]Leon Morris, *The Epistle to the Romans* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 418; Hendriksen, 379). [8]Jim McGuiggan, *The Book of Romans,* Looking Into The Bible Series (Lubbock, Tex.: Montex Publishing Co., 1982), 286-87. [9]*இது நாமகரணத்துவ மற்றும் நாமகரணமற்ற என்ற இருவகை விளக்கவுரைகளுக்கும் உண்மையாக இருந்தது.* [10]*இப்புத்தகத்தில் முன்பு காணப்பட்டுள்ள "யூதத்துவப் பிரச்சனை (9:1-13)" என்ற பாடத்திற்கு வட்டங்கள் கொண்ட வரைபடத்தை நீங்கள் தயாரித்திருந்தால், அதை இவ்விடத்தில் நீங்கள் மீண்டும் பயன்படுத்திக்கொள்ள முடியும்.*

[11]*ஒருசில மொழிபெயர்ப்பாளர்கள் ரோமர் 11:12 மற்றும் 11:25 ஆகிய இரு இடங்களிலும் "முழு எண்ணிக்கை" என்பதைக் கொண்டுள்ளனர், ஆனால் அவைகள் விதி என்பதற்கு மாறாக விதிவிலக்கு என்பவையாக உள்ளன.* [12]C. G. Wilke and Wilibald Grimm, *A Greek-English Lexicon of the New Testament,* trans. and rev. Joseph Henry Thayer (Edinburgh: T. & T. Clark, 1901; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1977), 468; Hendriksen, 379. The NCV has "that is how," while the SEB and McCord have "in this way." [13]F. F. Bruce, *The Letter of Paul to the Romans,* The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 209; Morris, 420.

## ஆயிரம் ஆண்டு முன்னரசாட்சிக் கண்ணோட்டம்

